முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 764**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**01.11.2021**, திங்கட்கிழமை

1. பிரணவ சக்தியே அரங்கா வாழ்க
பிரணவ கீர்த்தியே தேசிகா வாழ்க
தாரணம்ஆரணம் சர்வசூட்சுமங்களையும் தகர்த்தெறிந்து கலியுகத்தில் அழியாமைதரும்
தருகின்ற மாதவசியே தர்மனே வாழ்கவாழ்க
2. வாழ்கவென வாழ்த்தி சுப்ரமணியப்பெருமான் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஊழ்வென்று உலகமக்களை காக்க
உயர்வான அவதாரம் புரிந்துவந்த அரங்கனே
3. அரங்கனே நீ தர்மத்தின் காவலன்
அரங்கனே உன் தர்மம் இந்த உலகை மாற்றுமப்பா
வரம்பெற்று உன்பால் தீட்சை பெற்றவரெல்லாம்
வந்து உலகத்தை ஞானயுகமாக மாற்றம் செய்து அற்புதம் நிகழ்த்துவர்
4. நிகழ்த்தவே நிலவுலகில் நிலைத்தன்மை கொண்ட
நீதிமானாகவும் தர்மவானாகவும்
களைஎடுத்து எதிர்மறை மாந்தர்களை
கலியில் வதைத்து மாற்றம் செய்யவந்த
5. மா தவசியும் நீதானப்பா
மகானே உன் தர்மத்தை ஏற்கின்ற தேசமெல்லாம்
தர்மதேசமாகி இனிதே எல்லா வளமும் பெற்று சிறக்கும்
கர்மவினை பிணி சோடை கயவு களவு கையூட்டு என்கின்ற மாபாவங்கள் இல்லாத
6. இல்லாத புண்ணிய பூமியாக மாறி
இந்த உலகில் எல்லாம் எளிமையாகவும் இயற்கையாகவும்
இன்னல்கள் இன்றி அமைதிபட கிட்டி
உலகமே பெரும் பாதுகாப்பு பெறும்
7. காப்பு தருகின்ற கலியுகத்தின் ஒரே தவசி நீ
கருணைகொண்டு உலகை இயக்குகின்ற மகா யோகி நீ
ஆற்றல்பட நீ தொடர்ந்து செய்யும் பூஜை
அகிலத்தை தர்மலோகமாக மாற்றி காத்தருளும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–